கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை- 01
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்: அறிவுடைமை
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயரஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03.திருக்குறள் 'அறிவுடைமை' என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) அறிவுடைமை என்பதனால் கருதப்படுவது யாது?
ஒருவர் கல்வியினாலும் கேள்வியினாலும் சேகரித்துக் கொண்ட அறிவுகளை ஆராய்ந்து தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளுவது. அதாவது வாழ்க்கையில் நேரிடுகின்ற சூழ்நிலைக்குத் தகுந்தபடி சொந்த அறிவோடு நடந்து கொள்வது அறிவுடைமையாகும்.

(ஆ) அறிவின் சிறப்பு
ஒருவருக்கு அழிவு வராமல் காத்துகொள்ளும் கருவியாகவும் பகைவர் உள்ளே புகுந்து அழிக்க முடியாத அரணாகவும் உள்ளது அறிவாகும் என்பதனை,

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்"

என்றார்.

(02 புள்ளிகள்)

(இ) அறிவின் இலக்கணம்
மனத்தை சென்ற இடத்தில் செல்லவிடாமல், தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும். அதாவது, நன்மை தீமைகளை ஆராய்ந்து நமக்கு நல்லவழி சொல்லி தனி மனித ஒழுக்கத்திற்கு வழிகாட்டியாகவுள்ளது அறிவுதான். என்பதை,

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்றார்.

யாரால் என்ன சொல்லப்பட்டாலும் அவ்வாறே கேட்டு ஏற்றுக்கொள்ளாமல் உற்று அறிந்து உண்மையைக் காண்பதுவே அதாவது, கேட்பவற்றுள் மெய்ப்பொருள் காணவைப்பது, அறிவுதான் என்பதை,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்றார்.

தான் சொல்லுவன எளிய பொருளையுடையனவாகப் பதியுமாறு சொல்லி, தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமானப் பொருளையும் ஆராய்ந்து காண்பது, அதாவது தனது கருத்தை எளிமையாகச் சொல்வதுடன் பிறரது நுட்பமான கருத்தின் பொருளை நம்மை அறியவைப்பதும், அறிவாகும். என்பதை,

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு"

என்றார்.

உலகையே நட்பாக்கிக் கொள்வது அறிவுதான். எனவே நட்பின் ஆரம்பத்தில் பெரிதாக மகிழ்வதும், நாளடைவில் வாடுவதும் இல்லாது எப்போதும் ஒரே சீராக இருப்பது அறிவு என்பதை,

"உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு"

என்றார்.

உலகப் போக்கு எவ்வாறு இருக்கிறதோ அதற்குத்தக்க தன்னை மாற்றி அமைத்துக்கொள்ளக்கூடிய திறன் தருவது அறிவுடைமைதான். எனவே நம்மை காலச்சூழலுக்கேற்ப உலகத்தோடு பொருந்தி நடக்க வைப்பது அறிவு ஆகும்.என்பதை,

"எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது தறிவு"

என்றார்.

(10 புள்ளிகள்)

www.kedu.lk

(ஈ) அறிவுடையார் இலக்கணங்கள்
அறிவுடையோர் எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னே எண்ணி அறியவல்லார், அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவரே. அதாவது, வரப்போவதைச் சரியாக அறிய முடிந்த ஆற்றல் அறிவுடையாருக்கே உண்டு.என்பதை,

"அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அ.ஃதறி கல்லா தவர்"

என்றார்.

அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும், அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையோர் செயலாகும். எனவே அஞ்சுவதற்கு அஞ்சுதல் அறிவுடையார் கடமை.எனபதை,

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"

என்றார்.

எனவே 7,8 ஆம் குறள்களில்,பின்னர் நடக்க இருப்பதை முன்னரே அறிவதும் அஞ்சவேண்டியதற்கு அஞ்சி நடப்பதும் அறிவுடையார் இலக்கணங்கள் என்றார்.

(04 புள்ளிகள்)

(உ) அறிவுடையாருக்கு உண்டாகும் பயன்கள்
பின் வரக்கூடியதை முன்னதாக அறிந்து, காக்க வல்ல அறிவுடையோர்க்கு, அவர் நடுங்கும்படி வருவதாகிய துன்பம் எதுவும் இல்லை.எனவே எதிர்கால அதிர்ச்சித்துன்பங்களிலிருந்து காப்புறுதி செய்து கொள்வர் அறிவுடையோர்.என்பதை,

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்"

என்றார்.

அறிவுடையவர் வேறொன்றும் இல்லாதிருப்பினும் எல்லாம் உடையவரே ஆவர், அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.எனவே அறிவுடையவர் எல்லாம் உடையவராவார்.என்பதை,

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

என்றார்.

* எனவே 9,10 ஆம் குறள்களில், பின்னர் நடப்பவற்றை முன்னரே அறியக்கூடிய அறிவுடையவருக்கு எந்தத் துன்பமும் ஏற்படாததுடன், அறிவுடையாரே எல்லாம் உடையவர் எனும் பயன்களையும் கூறினார்.

(04 புள்ளிகள்)

	அறிவுடைமை வகைப்பாடு	தொகை
(அ)	**அறிவின் சிறப்பு**	1
(ஆ)	**அறிவின் இலக்கணம்**	2,3,4,5
(இ)	**அறிவுடையார் இலக்கணங்கள்**	7,8
(ஈ)	**அறிவுடையாருக்கு உண்டாகும் பயன்கள்**	9,10
(உ)	**அணி: உருவகம்:**	1

திருக்குறள் எழுந்த காலப்பின்னணி.

- காலம் - கி.பி. 3ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையான களப்பிரர் படையெடுப்புக்காலமான சங்கமருவிய காலம்.
- தமிழகத்தில் அரசியல், சமூகக்குழப்பங்கள் ஏற்பட்ட பின்னணியுடையது.
- பண்பாட்டுக் கலப்பும் சரியானதைத் தெரிவு செய்யும் நோக்கமும் தோன்றிய சூழல்.
- சமண, பௌத்தக் கோட்பாடுகளின் செல்வாக்கு ஏற்பட்ட காலம்.
- சங்ககாலத்துக் கட்டுப்பாடற்ற வாழ்வால் விழைந்த விரக்தி, சலிப்பு முதலிய அகப் புறவாழ்வின் அதிருப்தியும் புதிய வாழ்க்கை முறையில் ஏற்பட்ட நாட்டமும் வளர்ந்த காலம்.
- அரசு, சமூகம், வணிகம் போன்ற கட்டமைப்புக்களின் தோற்றமும் அவற்றுக்கான நெறிமுறைகளை உரைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்ட காலம்.
- சமூகச் சீர்கேடுகளைத் தவிர்த்து சமூகத்தை மீட்கத்தேவையான ஒழுக்கப் போதனையின் அவசியம் உணரப்பட்ட காலம்.
- வடஇந்தியச் செல்வாக்கும், வட மொழி இலக்கியத்தின் பரீட்சயங்களும், செல்வாக்கும் ஏற்பட்ட காலம்: அர்த்தசாஸ்திரம், இராஜநீதி சாஸ்திரம்,மனுஸ்மிருதி,வாத்சாயனரின் காம சூத்திரம்.

www.lkedu.lk

கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை- 02
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்: குற்றங்கடிதல்
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயராஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03. குற்றம் கடிதல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) குற்றம் கடிதல் என்பதனால் கருதப்படுவது யாது?
குற்றம் கடிதல் என்பது குற்றங்களை நீக்குவதும், விலக்குவதும் கண்டிப்பதும் ஆகிய மூன்றையும் குறிப்பது. ஒவ்வொரு மனிதரும் தன்னிடத்தில் உள்ள குற்றங்களை அறிந்து அவற்றை நீக்க வேண்டும். பிறகு மீண்டும் குற்றங்கள் வந்துவிடாமல் விலக்க வேண்டும். அதன் பிறகு தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலுள்ள குற்றங்களைக் நிலை அறிந்து கண்டிக்க வேண்டும்.

'குற்றம் கடிதல்' என்பதில் கடிதல் என்ற சொல்லுக்கு இரண்டு அர்த்தம் உண்டு. ஒன்று, தவிர்த்தல். இரண்டாவது, கடிந்துகொள்ளுதல் அல்லது தண்டித்தல். குற்றம் நிகழக் காரணமாக அமையும் சூழ்நிலை என்ன? அவற்றை எப்படித் தவிர்ப்பது? அறத்துக்கு எதிராகக் குற்றம் புரிபவர்களை எப்படித் தண்டிப்பது என இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அதிகாரத்தையே எழுதிச் சென்றிருக்கிறார் வள்ளுவர். எனவே அரசன், தன்னிடம் குற்றங்கள் ஏற்படாமல் பாதுகாத்தல் பற்றி இவ் அதிகாரத்தில் கூறப்பட்டது.

(02 புள்ளிகள்)

(ஆ) வள்ளுவர் குறிப்பிடும் குற்றங்கள் எவை?

செருக்கும், சினமும், சிறுமைக் குணமும் இல்லாதவருடைய பெருஞ் செல்வமானது சான்றோரால் மதிக்கப்படும் தன்மையை உடையது ஆகும். எனவே இறுமாப்பு, சினம், அற்பத்தனம் ஆகிய குற்றங்களை நீக்கி உயர்வு காண்பது பெருமைக்குரியது. என்பதை,

"செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து"

என்றார்.

ஒருவருக்கு கொடுக்காத உலோபமும், மாட்சியில்லாத மானவுணர்வும், தகுதியில்லாத உவகையும் தலைவராக இருப்பவருக்குக் கேடுதரும் குற்றங்கள் ஆகும். எனவே நிதியைப் பதுக்கிக் கொள்ளல், வறட்டு மானவுணர்ச்சி, பெருமையற்றனவற்றுக்கு மகிழ்ச்சி காட்டல் ஆகிய குணக்கேடுகளை ஆட்சியாளர் நீக்கிக்கொள்ள வேண்டும்.என்பதை,

"இவறலும் மாண்பு இறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு"

என்றார்.

எனவே 1,2 ஆம் குறள்களில்,செருக்கு, சினம், காமம், உலோபத்தனம், பொருத்தமற்ற மானம், அளவற்ற பொருத்தமில்லாத மகிழ்ச்சி என்பவற்றை குற்றங்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

(02 புள்ளிகள்)

(இ) குற்றங் கடியும்(பொதுவான)வழிகள் யாவை?

பழிச்சொல்லுக்கு வெட்கப்படுகின்றவர்கள், தினை அளவான சிறு குற்றம் தம்மிடம் வந்தாலும், அதனைப் பனையளவு பெரிதாகக் கருதி வருந்துவார்கள். எனவே பழிக்கு அஞ்சி நாணுபவர்கள் சிறு குற்றம் உண்டானாலும் பொறுக்காமல் உள்ளம் துடிப்பர். எனவே சிறிய குற்றத்தையும் பெரிதாக நினைத்துத் தவிர்த்தல் வேண்டும் என்பதை,

"தினைத் துணையாம் குற்றம் வரினும் பனைத் துணையாக்
கொள்வர் பழி நாணுவார்"

என்றார்.
ஒருவருக்கு வாழ்வின் முடிவைத் தருகின்ற கொடிய பகை குற்றமே. ஆகவே, குற்றம் செய்யாதிருப்பதையே பொருளாகக் கொண்டு தம்மை எப்போதும் காத்துக்கொள்க. எனவே நாம் செய்யும் குற்றம் அழிவை ஏற்படுத்தும் என்பதை அறிந்து, குற்றம் வராமற் காத்தல், வேண்டும் என்பதை,

"குற்றமே காக்க பொருளாக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை"

என்றார்.

www.keu.lk

குற்றம் வரும் முன்பே, வராமல் காத்துக் கொள்ளாதவர் வாழ்க்கையானது,நெருப்பின் முன்னர் வைத்த வைக்கோல் போர் போல விரைவாகக் கெட்டழியும்.எனவே குற்றம் வராமல் தடுக்கும் ஆற்றலை வளர்த்து கொள்ளுதல் குற்றங் களையப் பெரிதும் உதவும்.என்பதை,

"வரு முன்னர்க் காவாதான் வாழ்க்கை எரி முன்னர்
வைத் தூறு போலக் கெடும்."

என்றார்.

துனக்கும் குற்றம் வராமல் நீக்கி, பிறர் குற்றங்களையும் கண்டறிந்து நீக்குவாரானால், அரசருக்கு என்ன குற்றம் உண்டாகும். எனவே தன் குற்றம் களைந்து பிறர் குற்றம் ஆராயும் தலைவரிடம் எக்குறையும் காண்பது அரிது என்பதை,

"தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின்
என் குற்றம் ஆகும் இறைக்கு"

என்றார்.

எனவே 3 - 6 ஆம் குறள்கள்,சிறிய குற்றத்தையும் பெரிதாக நினைத்துத் தவிர்த்தல்,அழிவை ஏற்படுத்தும் என்பதை அறிந்து, குற்றம் வராமற் காத்தல், வருமுன் காத்தல், பிறர் குற்றம் காணாமல் தன் குற்றத்தைக் காணல் எனும் குற்றங்கடியும் வகைகளைக் குறிப்பிடுகின்றன.

(08 புள்ளிகள்)

(ஈ) குற்றங் கடியும் (சிறப்பான) வழிகள் யாவை?

செல்வம் பெற்றபோது அதனாலே செய்யவேண்டிய செயல்களைச் செய்யாமல் தவறியவருடைய செல்வமானது, நிலைக்கும் தன்மையற்று, அழியும். எனவே பொதுப் பொருளைப் பொதுச் செயல்களுக்குச் செலவழிக்காது பதுக்குபவர் குற்றமுடையோர் ஆவார் என்பதை,

"செயற் பால செய்யாது இவறி யான் செல்வம்
உயற் பால தன்றிக் கெடும்"

என்றார்.

செல்வத்தின் மேல் பற்றுக்கொண்ட உள்ளம் எனப்படும் கஞ்சத்தனம், எந்தக் குற்றங்களோடும் எண்ணப்படும் ஒன்றாக இல்லாமற், பெருங் குற்றமாகவே கருதப்படும். எனவே செய்யப்பட வேண்டியவற்றுக்குச் செலவிடாத சிக்கனத்தன்மை எந்த நன்மையுள்ளும் சேராது.என்பதை,

"பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவ தொன்று அன்று"

என்றார்.

எப்போதும் தன்னையே வியந்து பேசுதல் கூடாது. நன்மை பயவாத செயல்களை ஒருபோதும் செய்ய விரும்புதலும் செய்தலும் கூடாது. எனவே உள்ளத் தாழ்மையையும் நன்மையுமற்ற செயல்களை விரும்பாமையையும் வேண்டும். என்பதை,

"வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை"

என்றார்.

தன் விருப்பத்தைப் பிறர் அறியாதபடி நுகர வல்லவரானால், அவரைப் பகைத்தவர் செய்யும் சூழ்ச்சிகள் எல்லாம் பயனில்லாமல் அழிந்து போகும். எனவே, பகைவர் அறிய பொருட்காதல் கொள்வது குற்றமாகி விடும்.என்பதை,

"காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்"

என்றார்.

எனவே, 7,8,9,10 ஆம் குறள்கள்,உலோபத்தனத்தை நீக்கிக் கொள்ளல், தன்னைப் புகழாமை,தான் விரும்பும் விடயங்களை மற்றவர் அறியாமற் பாதுகாத்தல் எனும் வழிகளைக் கூறியுள்ளன.

(08 புள்ளிகள்)

	குற்றங்கடிதல் வகைப்பாடு	**தொகை**
(அ)	**வள்ளுவர் குறிப்பிடும் குற்றங்கள்**	1,2
(ஆ)	**குற்றங் கடியும்(பொதுவான)வழிகள்**	,3,4,5,6
(இ)	**குற்றங் கடியும் (சிறப்பான) வழிகள்**	7,8,9,10
(ஈ)	**அணி:உவமை**	3,5

www.ikeu.lk

கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை - 03
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்: பெரியாரைத்துணைக்கோடல்
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயராஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03. திருக்குறள் பெரியாரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பெரியாரது இலக்கணமும் துணைக்கொள்வதன் அவசியமும்

ஆரசர் அறம் அறிந்தவர் நட்பைத் துணையாகக்கொண்டு,வந்த துன்பம் நீக்கி அத்துன்பம் இனிவராமற் காத்து, அறத்தின் தன்மைகளை அறிந்து, முதிர்ந்த அறிவுடையவரது நட்பினை, திறன் அறிந்து ஆராய்ந்து பெற்றுக் கொள்ளல் பெரியாரது இலக்கணமாகும்.இதனை,

"அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்."(441)

என்றார்.

நாட்டிற்கு வந்தடைந்த துன்பத்தை நீக்கி, மேலும் நாட்டிலே துன்பம் வராதபடி காக்கும் தகுதியுடையவர்கள் பெரியோரே என்பதால் பெரியோரையே துணையாகக் கொள்வது அவசியமாகும்.என்பதனை,

"உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல".(442)

என்றார்.

(04 புள்ளிகள்)

(ஆ) பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பு

பெரியோரை விரும்பித் தமக்குரிய சுற்றத்தினராகப் பெற்றுக்கொள்ளுதல், பெறுதற்கரிய பேறுகளுள் எல்லாம் அரிதான பெரும்பேறு ஆகும் சிறப்புடையது. என்பதனை,

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."(443)

என்றார்.
தன்னிலும் பெரியாராக உள்ளவர்களை தன் சுற்றத்தினராக ஏற்று துணைக்கோண்டு பின்பற்றி வருதல், ஒருவரது வலிமையுள் எல்லாம் தலைமையான வலிமையுடைய சிறப்புடையதாகும். என்பதனை,

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை".(444)

என்றார்.

தகுதியான வழிகளை ஆராய்ந்து சொல்லுகின்ற பெரியாரையே கண்ணாகக் கொண்டு உலகம் நடந்து கொள்ளும் சிறப்புடையதால், மன்னர்கள் அப்பெரியாரை ஆராய்ந்து தன் சுற்றமாக்கிக் கொள்ள வேண்டும். என்பதனை,

"சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்."(445)

என்றார்.

எனவே 3,4,5 ஆம் குறள்கள் ஊடாக பெரியாரைத் துணைக்கொள்வது அரசர்க்குரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரியதென்றும், எல்லா வலிமைகளிலும் சிறந்த வலிமையுடையது என்றும், ஆட்சியில் பெரியார்களே கண் போன்றவராகவும் விளங்கும் சிறப்புடையவராவர் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(06 புள்ளிகள்)

www.kedu.lk

(இ) பெரியாரைத் துணைக்கோடலின் பயன்கள்:
தகுதியுடைய பெரியோர்களின் துணையுடன், தான் நடந்து கொள்ளும் வல்லவரை, பகைவர் பகைத்துச் செய்யக்கூடிய துன்பம் ஏதுமில்லாத பயனுடையது. என்பதனை,

"தக்கார் இனத்தனாய் தான் ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்."(446)

என்றார்.

இடித்துக் கூறித் திருத்தும் துணைவரான பெரியோரைத் துணையாகக் கொண்டவரை, எவரும் கெடுத்துவிடமுடியாத பயனுடையதாய் அமையும். என்பதனை,

"இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்".(447)

என்றார்.

எனவே 6,7 ஆம் குறள்கள் ஊடாக பெரியாரைத் துணைக்கொண்டோருக்குப் பகைவர்கள் எந்தத் துன்பத்தையும் செய்யமுடியாத **பயன்களை** வலியுறுத்தியுள்ளார்.

(04 புள்ளிகள்)

(ஈ) பெரியாரைத் துணைக்கோடாமையின் குற்றங்கள்
இடித்துச் சொல்லி திருத்துபவர் இல்லாத பாதுகாப்பற்ற மன்னர் தன்னைக் கெடுப்பவர் எவரும் இல்லாதபோதும், தானாகவே கெட்டழிவர்.(மன்னரைக் கெடுக்கும் பகைவர் இல்லாமல், தானாக அழிந்து போவர்) என்பதனை,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்."(448)

என்றார்.

முதல் இல்லாத வாணிகருக்கு அதனால் வரும் ஊதியமும் இல்லாதிருத்தல் போல தன்னைத் தாங்கும் துணையில்லாதவர்க்கு உலகில் நிலைபேறும் இல்லாதிருக்கும். (மன்னர்கள் தம்மைத் தாங்குவாரைப் பெற்றே நிலைபெறவேண்டும்.) என்பதனை,

"முதல் இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்பு இலார்க்கு இல்லை நிலை."(449)

என்றார்.

பலரோடும் பகைத்துக் கொள்வதைவிட, நல்லோருடன் கொண்ட தொடர்பைக் கைவிட்டு விடுதல், அதனினும் பத்து மடங்கு தீமை தருவதாகும். (மன்னர்கள் பெரியாரோடு நட்பினைக் கொள்ளாது ஒழித்தல் தான் தனியனாய் பலருடைய பகையைக் கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை தரும்.) என்பதனை,

"பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்."(450)

என்றார்.

எனவே 8,9,10 ஆம் குறள்கள் ஊடாக பெரியாரைத் துணைக் கொள்ளாவிட்டால் மன்னரைக் கெடுக்கும் பகைவர் இல்லாமல், தானாகவே அழிந்து, தம்மைத் தாங்குவார் இல்லாமல் நிலைபெற முடியாமல்,தான் தனியனாய் பலருடைய பகையுடன் வாழும் **தீமையும் ஏற்படும்** என எச்சரித்துச் சொல்லியுள்ளார்.

(06 புள்ளிகள்)

	பெரியாரைத்துணைக்கோடல் வகைப்பாடு	**தொகை**
(அ)	**பெரியாரது இலக்கணமும் துணைக்கொள்வதன் அவசியமும்**	1,2
(ஆ)	**பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பு**	3,4,5
(இ)	**பெரியாரைத் துணைக்கோடலின் பயன்கள்**	6,7
(ஈ)	**பெரியாரைத் துணைக்கோடாமையின் குற்றங்கள்**	8,9,10
(உ)	**அணி:உவமை:**	9

www.ikdu.lk

கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை - 04
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்: சிற்றினம்சேராமை
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயராஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03.திருக்குறள்,சிற்றினம்சேராமை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு,பின்வருவனவற்றை விளக்குக.

(அ) சிறியோருடன் சேர்வது தகாது என்பதும் அவ்வாறு சேரக்கூடாது என்பதற்கான காரணமும்.

சிறியோருடன் சேர்வது தகாது என்பது:

பெரியோர், கீழ்மக்களின் கூட்டத்தோடு சேர மாட்டார்கள் ஆனால் சிறியோர்களோ இனம் இனத்தோடு சேருமென்பதுபோல் அந்தக் கீழ் மக்கள் கூட்டத்துடன் சேர்ந்து கொள்வார்கள்.(சிறியோருடன் சேராதது பெரியோருக்குரிய இயல்பாகும்) என்பதை,

"சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்"

என்றார்.

சேரக்கூடாது என்பதற்கான காரணம்:

சேர்ந்த நிலத்தின் தன்மையால் நீரானது வேறுபட்டு அச்சேர்ந்த நிலத்தின் தன்மையையே அடைந்துவிடும். அதுபோல மக்களின் அறிவும், தாங்கள் சேர்ந்த இனத்தின் தன்மையைப் பெற்றதாகிவிடும்.(சிறியோரின் இயல்பால் பெரியோரின் அறிவும் மாறிவிடும்) என்பதை,

"நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு"

என்றார்.

(ஆ) இனத்தோடு சேருதலின் முக்கியத்துவமும் இனத்தின் முக்கியத்துவமும்

இனத்தோடு சேருதலின் முக்கியத்துவம் 3 ஆம் குறள்:ஒருவரின் உணர்ச்சி, மனத்தைப் பொறு(ரு)த்து அமையும் அவர் இப்படிப்பட்டவர் என்று அளந்து சொல்வது அவர் சேர்ந்திடும் கூட்டத்தைப் பொறு(ரு)த்து அமையும். ஒருவரது இயல்பினை அவர்கள் சேருகின்ற இனமே தீர்மானிக்கும்.என்பதை,

"மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னா னெனப்படுஞ் சொல்"

என்றார்.

இனத்தின் முக்கியத்துவம் கூறப்பட்டது 4 ஆம் குறள்:ஒருவரின் அறிவு அவரது மனத்தின் இயல்பு என்பது போல் தோன்றினாலும், அது அவர் சேர்ந்த கூட்டத்தாரின் தொடர்பால் வெளிப்படுவதேயாகும்.(ஒருவர் சேருகின்ற இனமே அவரது அறிவினைத் தீர்மானிக்கும்) என்பதை,

"மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்
கினத்துள தாகும் அறிவு"

என்றார்.

www.ikeou.lk

(இ)சிற்றினம் சேராமையின் சிறப்பு:

ஒருவன் கொண்டுள்ள தொடர்பு தூய்மையானதாக இருந்தால்தான் அவனுடைய மனமும் செயலும் தூய்மையானவையாக இருக்கும்.(மனத்தூய்மையும் செயல் தூய்மையும் ஏற்படும்.)என்பதை,

"மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்"

என்றும்,

மனத்தின் தூய்மையால் புகழும், சேர்ந்த இனத்தின் தூய்மையால் நற்செயல்களும் விளையும்.என்பதை,

"மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை"

என்றும்,

மனத்தின் நலம் உயிருக்கு ஆக்கமாக விளங்கும் இனத்தின் நலமோ எல்லாப் புகழையும் வழங்கும் (நன்மையும் வலிமையும் மறுமையில் இன்பமும் ஏற்படும்.)என்பதை,

"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும்"

என்றும் சிற்றினம் சேராமையின் சிறப்பைக் கூறினார்.

(ஈ)நல்லினத்தால் ஏற்படும் நன்மைகளும் சிற்றினத்தால் ஏற்படும் தீமையும்:

மனவளம் மிக்க சான்றோராக இருப்பினும் அவர் சேர்ந்துள்ள கூட்டத்தினரைப் பொறுத்தே வலிமை வந்து வாய்க்கும்.(நல்லினத்தார் போன்ற துணையும் சிற்றினத்தார் போன்ற பகையும் இல்லை.)என்பதை

"மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநலம் ஏமாப் புடைத்து"

என்றும்,

நல்ல உறுதியான உள்ளம் படைத்த உயர்ந்தோராக இருந்தாலும் அவர் சார்ந்த இனத்தின் உறுதியும் அவருக்கு வலிமையான துணையாக அமையக் கூடியதாகும்.

"மனநலத்தி னாகும் மறுமைமற் ற.்.தும்
இனநலத்தி னேமாப் புடைத்து"

என்றும்,

நல்ல இனத்தைக் காட்டிலும் துணையாக இருப்பதும், தீய இனத்தைக் காட்டிலும் துன்பம் தரக்கூடியதும் எதுவுமே இல்லை.என்பதை,

"நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில்"

என்றும் நல்லினத்தால் ஏற்படும் நன்மைகளையும் சிற்றினத்தால் ஏற்படும் தீமைகளையும் கூறினார்.

	சிற்றினம்சேராமை வகைப்பாடு	தொகை
(அ)	சிறியோருடன் சேர்வது தகாது என்பதும் அவ்வாறு சேரக்கூடாது என்பதற்கான காரணமும்.	1,2
(ஆ)	இனத்தோடு சேருதலின் முக்கியத்துவமும் இனத்தின் முக்கியத்துவமும்	3,4
(இ)	சிற்றினம் சேராமையின் சிறப்பு	5,6,7
(ஈ)	நல்லினத்தால் ஏற்படும் நன்மைகளும் சிற்றினத்தால் ஏற்படும் தீமையும்	8,9,10
(உ)	அணி:உவமை:	2

www.ikedu.lk

கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை - 05
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்: தெரிந்து செயல்வகை
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயராஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03. திருக்குறள் 'தெரிந்து செயல்வகை' என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு,பின்வருவனவற்றை விளக்குக.

(அ) செய்யும் முறையும் செய்யத்தகும் செயலும்

ஒரு செயலைச் செய்வதற்கு முன்பாக, அதனால் முதலில் அழியக்கூடியதும், பின்னர் ஆகிவரக்கூடியதும், கிடைக்கும் பயனும் கருதிய பின்னரே செய்ய வேண்டும். (இழப்பு, ஆக்கம், நீண்ட கால ஆதாயம் இவற்றை எண்ணி செயலில் ஈடுபடுதல் வேண்டும்)என்பதை,

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி
வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல்." (461)

என்றார்.

தொழில் தெரிந்த நண்பர்களுடன் கலந்து எதையும் ஆராய்ந்து செய்பவருக்கு, முடிவதற்கு அரிய பொருள் என்று சொல்லக் கூடியது யாதொன்றுமே இல்லை.(பெரியாரைத் துணைக்கொண்டு செயல் ஆற்றுவோர்க்கு எதையும் எளிதாகச் செய்ய முடியும்) என்பதை,

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்." (462)

என்றார்.

(04 புள்ளிகள்)

(ஆ) செய்யாது கைவிடவேண்டிய செயலும், கைவிடாது செய்தால் ஏற்படும் இழுக்கும்

செய்யாது கைவிடவேண்டிய செயல்கள்:
வரப்போவதாகக் கருதும் இலாபத்தை எண்ணி, செய்துள்ள முதலீட்டையும் இழக்கின்ற முயற்சியினை அறிவுடையவர்கள் ஒரு போதும் மேற்கொள்ள மாட்டார்கள் (முதலுக்கே மோசம் வரும் முயற்சியை அறிவுடையார் மேற்கொள்ளார்)என்பதை,

"ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்." (463)

என்றார்.

தமக்கு இகழ்ச்சி தருவதான ஒரு குறைபாட்டுக்கு அஞ்சுகிறவர்கள், ஊதியம் வரும் என்று தெளிவில்லாத செயலை ஒரு போதும் தொடங்க மாட்டார்கள்(புரியாத தொழிலில் புக வேண்டாம்) என்பதை,

"தெளிவி லதனைத் தொடங்கார்
இளிவென்னும் ஏதப்பாடு அஞ்சு பவர்." (464)

என்றார்.

கைவிடாது செய்தால் ஏற்படும் இழுக்கு:ஒரு செயலைப் பற்றி எல்லாவகையிலும் முழுமையாகவும் ஆராயாமல் செய்யத் தொடங்குதல், பகைவரை நல்ல பயிருள்ள பாத்தியுள் நிலைபெறுத்துவது போன்ற செயலாகும் (எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற மனப்பான்மையுடன் தொடங்கும் செயல் பகைவர் வளரவே துணை செய்யும் என்பதை,

"வகையறச் சூழா தெழுதல்
பகைவரைப் பாத்திப் படுப்பதோ ராறு."(465)

என்றார்.

(06 புள்ளிகள்)

www.kedu.lk

(இ)செய்ய வேண்டியவையும் செய்யக்கூடாதவையும்

செய்யத் தகுந்தது அல்லாத ஒரு செயலைச் செய்தாலும் பொருள் கெடும் செய்யத் தகுந்த செயலைச் செய்யாமையாலும் பொருள் கெடும்.(செய்யக்கூடாதவற்றைச் செய்வதும் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமையும் தீமையே தரும்) என்பதை,

‘‘செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்” (466)

என்றார்.

(02 புள்ளிகள்)

(ஈ) செயலைச் செய்வதற்குரிய உபாயமும் உரிமையும்

செயலைச் செய்வதற்குரிய உபாயம்:
நன்றாக எண்ணிய பின்னரே ஒரு செயலைச் செய்யத் துணிய வேண்டும் ‘துணிந்த பின்னர் எண்ணுவோம்’ என்று எதையும் நினைப்பது குற்றமாகும் (செய்வதற்கான வழிகளைச் செயலைத் தொடங்க முன்னரே தீர்மானிக்க வேண்டும். தொடங்கிய பின் ஆராய நினைப்பது குற்றமாகும்) முயற்சியை முதலில் தொடங்கிவிட்டுச் சிக்கல்கள் நேர்ந்தால் அப்போது எதிர்கொள்ளலாம் என்ற மிகை நம்பிக்கை இழுக்காய் முடிந்துவிடும்) என்பதை,

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.” (467)

என்றார்.

செய்வதற்கு உரிய வழிகளிலே முயன்று செய்யப்படாத தொழிலானது, பலர் துணை நின்று பின்னர்க் காத்தாலும் கெட்டுப் போய்விடும்.(பொருத்தமான உபாயமற்ற செயல், பலர் நின்று காத்தும் குற்றத்தையே ஏற்படுத்தும்)(முறையறிந்து மேற்கொள்ளாத முயற்சி எவ்வளவு துணை இருந்தாலும் குறையாகவே முடியும்) என்பதை,

“ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.” (468)

என்றார்.

அவரவரது இயல்புகளைத் தெரிந்து கொண்டு, அவரவர்க்குத் தகுந்தபடி செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும் கூடக் குற்றம் உண்டாகிவிடும்.(அவரவர் குணங்களை அறிந்து, அதற்கேற்பச் செயற்பட வேண்டும்) (ஏற்போரின் செயற்பாடு அறியாமல் செய்த நன்மையும் தவறாகப் போக வாய்ப்புண்டு) என்பதை,

“நன்றாற்ற லுள்ளுந் தவுறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.” (469)

என்றார்.

செயலைச் செய்வதற்குரிய உரிமை:உயர்ந்தோர் இகழ்ச்சியாக நினையாத செயல்களையே ஆராய்ந்து செய்யவேண்டும் உயர்ந்தோர் தம் தகுதியோடு பொருந்தாதவற்றை ஏற்கவே மாட்டார்கள்(மற்றவர் தம்மை இகழாதவகையில், தம் நிலைக்கேற்ற செயல், உபாயங்களை வகுத்துக்கொள்ள வேண்டும்)(சட்டத்திற்கு முரணானதும் சமுதாய நலனுக்கு ஏற்பிலாததுமான செயல்களைச் செய்யலாகாது) என்பதை,

“எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் தம்மோடு
கொள்ளாத கொள்ளாது உலகு.” (470)

என்றார்.

(08 புள்ளிகள்)

	தெரிந்து செயல்வகை வகைப்பாடு	**தொகை**
(அ)	செயலைச் செய்யும் முறையும் செய்யத்தகும் செயலும்	1,2
(ஆ)	செயலைச் செய்யாது கைவிடவேண்டிய செயல்கள்	3,4
(இ)	சேயலைக் கைவிடாது செய்தால் ஏற்படும் இழுக்கு	5
(ஈ)	செய்ய வேண்டியவையும் செய்யக்கூடாதவையும்	6
(உ)	செயலைச் செய்வதற்குரிய உபாயம்	7,8,9
(ஊ)	செயலைச் செய்வதற்குரிய உரிமை	10
(எ)	அணி:உவமை:	5

www.kedu.lk

கல்குடா கல்வி வலய இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை- 06
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்: வலியறிதல்
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயரஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03. திருக்குறள் 'வலியறிதல்' அதிகாரத்தை அடிப்படையாக்க கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) வலிமையின் பகுதிகள் யாவை?அவற்றை அறிந்து, செயல் மேற்கொள்வார் பயன் யாது?

- முயற்சி மேற்கொள்ளும் முன்னர் அதில் தொடர்புடைய நான்கு வலிமைமைகளையும் தெரிந்து செயற்படுத்தவேண்டும்.
- **வலிமையின் பகுதிகள்**
  - = செயலின் வலிமை: பகைவரின் கோட்டையை முற்றுகையிடல்,ஆனிரை கவர்தல்,மதிலைக்காத்தல்,பகைவர் சூழ்ச்சி தலைதூக்காவண்ணம் செயற்படுதல்.
  - = தனது வலிமை: பொருள்,படை,அரண்,மனவலி போன்றன.
  - = பகைவர் வலிமை: பகைவரது பொருள்,படை,அரண்,மனவலி போன்றன.
  - = இருவருக்கும் துணையானவர் வலிமை: தனக்கும் பகைவருக்கும் துணையாக நிற்போரின் வலிமை.
- வினைவலி,தன்வலி,துணைவலி ஆகிய மூன்றும் பகைவரைவிட தனக்கு மிகுந்திருக்குமாயின் செயல் செய்யமுடியும்.தன்வலிமை குறைவு தனக்குத் தோல்விவரும் என்றெல்லாம் சந்தேகம் ஏற்பட்டால் தான் செய்யக்கருதிய செயல்களைக் கைவிடவேண்டுமென்பதனை வலியுறுத்த,

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்."

எனும் குறள் வெண்பாவை அமைத்துள்ளார்.

(03 புள்ளிகள்)

செயல் மேற்கொள்வார் பயன்:

- தம்மால் தொடங்கிய செயலையும் அதற்கு வேண்டிய திறனையும் அறிந்து செயலில் வெற்றி காண, அதில் முழுமனதுடன் ஈடுபடவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் அரசருக்கு முடியாத செயல்கள் எவையும் இல்லை யெனும் பயனை,

"ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்"

எனும் குறளால் குறிப்பிட்டார்.

(02 புள்ளிகள்)

(ஆ) தனது வலியை அறியாததால் ஏற்படும் இழுக்குகள்

- ஒரு செயலைச் செய்ய முற்படுவோர், தன்னுடைய வலிமை இவ்வளவுதான் என ஆராய்ந்து அறியாமல் மன ஊக்கத்தால் தம்மைவிட மேலான வலியவரோடு முனைந்து போரிடத்தொடங்கினால், விளைவு பாரதூரமாகவே அமையும். இவ்வாறு மூவகை ஆற்றலையும் அறியாமல் செயற்பட்டு தொடங்கியதைத் தொடரமுடியாமல் இடையே விட்டுக் கெட்டவர் பலர் உளர் எனும் கருத்தை,

"உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்"

எனும் குறளால் குறிப்பிட்டார்.

- தன்னைத்தானே வலியவராக நினைத்து மற்றவர்களோடு சமாதானமாக சேர்ந்து நடக்காமல், தன் வலிமையின் அளவையும் அறியாமல், செருக்குடன் தன்னைத்தானே வியந்து புகழ்ந்து கொண்டு பிற அரசரோடு பகைகொள்வோர் மிக விரைவில் கெட்டழிவர் என்பதை,

"அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்"

என்றார்.

(03 புள்ளிகள்)

(இ)பகைவரதும்,பகைவரின் துணைவரதும் வினைவலிவலிமையை அறியாதபோது ஏற்படும் இழுக்குகள்

- மென்மையான மயிலினது தோகை, பாரம் குறைந்ததாக அமைந்தாலும் அளவுக்கு அதிகமாக ஒரு வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு உடைந்தே போகும். எனவே, தான் வலியவராக இருந்தாலும் தம்மை எதிர்க்கும் பகைவர் எளியவர் என நினைத்து பலரோடு பகைத்துக்கொண்டால் அழிவது உறுதி. இதனை,

www.kedu.lk

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்"

என பிறிது மொழிதல் அணியினூடாக குறிப்பிட்டுள்ளார்.

- ஒரு மரக்கிளையின் நுனியில் ஏறிவிட்டவர், அந்த அளவையும் கடந்து மேலும் ஏற முயன்றால், அம் முயற்சியே அவர் உயிருக்கு முடிவாகிவிடும். எனவே பகைமேற் சென்ற ஒருவர் செல்லுமளவு சென்று பின்பு மனவூக்கத்தால் அவ் எல்லைக்கப்பாலும் எல்லைகடந்து செல்வாராயின் அச்செயல் நிறைவுறாது அழிவேற்படும். எனவே தன் வலிமையின் எல்லை மீறி முயற்சிப்பது அழிவில் முடியுமென்பதை, பிறிது மொழிதல் அணியினூடாக,

"நுனிக்கொம்பர் ஏறினார் அ.்திறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்"

என்று குறிப்பிட்டுள்ளார்.

(04 புள்ளிகள்)

(ஈ) அரசரின் ஆற்றலுள் பொருட்செல்வத்தினால் வலியறிதல் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?

- வலியறிதல் என்ற அதிகாரத்தில், படையெடுத்துப் போர்செய்யும் அரசரைப்பற்றிக் குறிப்பிட்டபோதும்,இன்னொரு பகுதியில் பொருள்வள வருவாய் பற்றியும் 7,8,9,10 ஆம் குறள்களில் குறிப்பிட்டுள்ளார்.
- வருவாயின் அளவை அறிந்து, அதற்கேற்பக் கொடுக்கவேண்டும் அல்லது செலவு செய்யவேண்டும். அது பொருளைக் காப்பாற்றிக் கொண்டு நடக்கும் வழியாகும். எனவே கொடை தொடர்ந்து நடைபெற 'பொருளினது வலிமை' அறிந்து கொடுப்பதும் பொருட் செல்வத்தின் வலிமையாகும்.இதனை,

"ஆற்றின் அறவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி"

என்கிறார்.

- முதலில் பொருள் வரும் வழிகளை ஆராய்தல் வேண்டும். பொருள் வரும் வழி (வருவாய்) சிறிதாக இருந்தாலும், போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை. எனவே செலவை வரவுக்குள் கொண்டுவந்துவிட்டால் வருவாய் சிறிதானாலும் கேடு உண்டாகாது. பொருள் வரவு குறைவாக இருந்தாலும் செலவை அதைவிடக் குறைத்துக் கொள்ள வேண்டும். வரவும் செலவும் சமமாக இருந்தாலும் கேடு இல்லை.இதனையே,

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்கிறார்.

- தன்னிடம் உள்ள பொருளின் அளவு அறிந்து அதற்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துக்கொள்ளாதவருடைய வாழ்க்கை, பல வளமும் இருப்பது போல் தோன்றி, உண்மையாகவே இல்லாமல் அழிந்து போய்விடும். எனவே தனது பொருள்நிலை அறியாமல் வாழ்வு நடத்துபவர் செல்வம் இழந்து, வாழ்க்கையையும் தொலைத்து நிற்பரென்பதை,

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்"

என்ற குறனால் குறிப்பிட்டுள்ளார்.

- ஒருவர் தனக்குள்ள வருவாயாக இருக்கும் பொருளின் அளவை ஆராய்ந்து பார்க்காமல் அளவுக்கும் அதிகமாகப் பிறர்க்கு உதவி செய்தால், அவரது செல்வம் விரைவில் குறைந்து கெடும்.எனவே பொது நன்மைக்கான கொடை என்றாலும் வளத்தின் வலிமையை எண்ணிச் செய்யவேண்டும். என்பதை வலியுறுத்துவதே,

"உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்"

எனும் குறள் வெண்பாவாகும்.

(08 புள்ளிகள்)

	வலியறிதல் வகைப்பாடு	**தொகை**
(அ)	வலிமையின் பகுதிகளும் செயல் மேற்கொள்வார் பயனும்	1,2
(ஆ)	தனது வலியை அறியாததால் ஏற்படும் இழுக்குகள்	3,4
(இ)	பகைவரதும்,பகைவரின் துணைவரதும் வினைவலிவைலிமையை அறியாதபோது ஏற்படும் இழுக்குகள்	5,6
(ஈ)	அரசரின் ஆற்றலுள் பொருட்செல்வத்தினால் வலியறிதல் பற்றி கூறப்படுவன	7,8,9,10
(உ)	அணி:உவமை: பிறிது மொழிதல் அணி	5,6

www.ikeu.lk

கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை - 07
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்: காலமறிதல்
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயரஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03. திருக்குறள் 'காலமறிதல்' அதிகாரத்தை அடிப்படையாக்க கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) காலம் அறிதலாவது யாது?

- பகைவர் மேலே படைநடாத்த முடிவு செய்த அரசர் ஒருவர் அவ் வினைக்கு ஏற்ற காலத்தை அறிதல்.

(ஆ) இவ்வதிகாரம் ஏன் 'வலி அறிதல்' அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டுள்ளது?

- தனதும்,பகையினதும், தொடங்கும் வினையினதும், துணையினதும் வலிமையை அறிந்துகொண்ட பின்பே படை நடாத்தும் முடிவு மேற்கொள்ளப்படும். எனவே, வலிஅறிதலின் பின் காலம் அறிதல் வைக்கப்பட்டுள்ளது.

(இ) இவ்வதிகாரத்தில் விடயங்கள் வகுத்துரைக்கப்பட்டுள்ள ஒழுங்கைத் தருக.

- காலத்தினது சிறப்பு:(1)
- காலத்தை அறிதலின் பயன்:(2,3,4)
- காலம் பொருந்தி வராத வழி, என்ன செய்வது என்பது அதாவது, காலம் வராத இடத்து பகைமேற்செல்லாது இருத்தல்:(5)
- காலம் வரும்வரை பகைமேற் செல்லாது இருப்பதன் சிறப்பு:(6)
- காலம் வரும் வரையான இருப்பின்போது பகைமையை வெளிக்காட்டாமல் இருக்குமாறு:(7,8)
- காலம் வந்தவிடத்து பகை மேலே விரைவாகச் செல்லுமாறு:(9)
- காலம் வரும்வரையான இருப்பிற்கும், காலம் வந்த பின்னான வினைக்கும் இலக்கணம்:(10)

(ஈ) இவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள அணிகளை எடுத்துக்கூறுக.

- **உவமை : எடுத்துக்காட்டுவமை** : காலம் ஏற்காவிடின் வலியாற் பயனில்லையென்பது கருத்து. ஏற்ற காலமாவது,வெம்மையும் குளிரும் மிகாது நச்சுக்காற்று வீசாது தண்ணீரும் உணவும் தாராளமாய்க் கிடைத்து.நால்வகைப் படையும் நலமாகச் செல்வதாயிருப்பது.

- இதில் வந்துள்ளது எடுத்துக்காட்டுவமை :காக்கை தன்னைவிட வலிய கோட்டானைப் பகலில் வென்றுவிடும், அதுபோல் பகையை வெல்லக்கருதும் அரசர்க்கும் அதற்கு ஏற்ற காலம் வேண்டும்.

  ''பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும்
  வேந்தர்க்கு வேண்டும் பொழுது"(1)

- **உவமை :வினை உவமை** : வலிமிகுந்த அரசன் ஊக்க முள்ளவனாயினும் பகைமேற் செல்லாது காலம் பார்த்து ஒடுங்கியிருக்கின்ற இருப்பு சண்டையிடும் செம்மறிக் கடா தன் பகையை வலிமையாய்த் தாக்குதற்குப் பின் வாங்கும் தன்மையது. ஒடுக்கம் சோம்பலால் ஏற்பட்டதன்றென்பதற்கு 'ஊக்க முடையான்' என்றார். ஒடுக்கத்தின் தேவையும் சிறப்பும் தகர்பின் வாங்குதல் என்னும் உவமையால் விளங்கும்.

  ''ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
  தாக்கற்குப் பேரும் தகைத்து"(6)

- **உவமை :வினை உவமை** : **விளக்கம்:**காலத்தை எதிர்பார்க்க வேண்டிய பருவத்தில், கொக்கைப் போல இருந்து, காலம் வாய்த்த போதில், கொக்கு மீனைக் கொத்தினாற் போலத் தவறாமல் விரைந்து பகைவனைத் தாக்கி முடிக்க வேண்டும்.

- கூம்புதல் குவிதல். குவிதல் ஒடுங்குதல். மலரின் ஒடுக்கம் அரசரின் வினையொடுக்கத்திற்கு உவமையாயிற்று. ''ஓடுமீனோடியுறு மீன் வருமளவும் - வாடியிருக்குமாங் கொக்கு" (மூதுரை,16) தனக் கேற்ற மீன் வரும் வரை அது முன்னறிந்து தப்பாமைப் பொருட்டுத் தவஞ்செய்வான் போல்

www.ikeou.lk

அசைவற்று நிற்றலும், அது வந்தவுடனே திடுமென்று கொத்துதலும்,அரசன் காலம் வரும்வரை பகைவர் ஐயுறாவாறு அமைந்திருத்தற்கும் அது வந்தவுடன் விரைந்து வினை முடித்தற்கும் சிறந்த உவமையாயின. இதனால் இருப்பு வினைகளின் இயல்பும் விளக்க மாயின.

''கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்று அதன்
குத்து ஒக்க சீர்த்த இடத்து''(10)

	காலமறிதல் வகைப்பாடு	**தொகை**
(அ)	பகை வெல்லக்கருதும் காலத்தினது சிறப்பு	1
(ஆ)	காலத்தை அறிதலின் பயன்	2,3,4
(இ)	காலம் பொருந்தி வராத வழி, என்ன செய்வது என்பது	5
(ஈ)	காலம் வரும்வரை பகைமேற் செல்லாது இருப்பதன் சிறப்பு	6
(உ)	காலம் வரும் வரையான இருப்பின்போது பகைமை தோன்றாதிருக்குக(பகைமையை வெளிக்காட்டாமல் இருக்குமாறு)	7,8
(ஊ)	காலம் வந்தவிடத்து பகை மேலே விரைவாகச் செல்லுமாறு	9
(எ)	காலம் வரும்வரையான இருப்பிற்கும், காலம் வந்த பின்னான வினைக்கும் இலக்கணம்	10
(ஏ)	அணி:உவமை: எடுத்துக்காட்டுவமை,வினை உவமைகயள்	1,6,10

அரசியல் அதிகாரச் செய்திகளை வள்ளுவர் கூறும் விதங்கள் - உத்திகள்.

- அணிக்கையாட்சி : உவமை, உருவகம், சொற்பின்வருநிலையணி,ஒட்டணி,பிறிது மொழிதல் அணி
- வகுத்தும் தொகுத்தும் கூறுதல்:
- சிறந்த சொல்லாட்சிப் பயன்பாடு:
- அழுத்திக் கூறுதல் : வாழ்த்தல்,வைதல், வேண்டல், விதித்தல் பொருள்களில் கூறல்:
- சுருங்கிய சொல்லில் விரிந்தபொருள் வைத்துக்கூறுதல்:
- முரண்பாட்டு நயம் மிகுந்து கூறுதல்:
- சிறப்பை இத்தனை மடங்கு பெரிது என எண்ணளவு கொண்டு கூறுதல்:
- கூற்றுவகை – கவிக்கூற்றாகவும், சான்றோர் கூற்றாகவும் கூறல்:
- இழித்துரைத்தலினூடாக குற்றம் களைய முற்படும் உத்தி:
- நால்வகைச் சொற்களையும் கையாண்டு கூறுதல்:
- அதிகாரப் பெயர்கள் ஒரே முடிவையுடையனவாக அமைத்தல்:மை:அறிவுடைமை,சிற்றினம் சேராமை
- விதிவிலக்குகளைக் கூறும்போது காரணம் காட்டுதல்:
- வினாத்தொடுத்து உணர்வை கிளறிவிடும் பாங்கு:

www.ked.lk

கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை - 08
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்:இடனறிதல்
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயராஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03. திருக்குறள் இடனறிதல் அதிகாரத்தை அடிப்படையாக்க கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அதிகார வைப்பு முறை:பகைவர்மீது போர் நடாத்த விழைந்த அரசர் ஒருவர், போருக்கேற்ற நிலத்தையும்,பகைவர் கோட்டையைச் சூழ்தலுக்கேற்ற நிலத்தையும் அறிந்து கொள்ளலே 'இடன்அறிதல்' ஆகும். ஏலவே, பகைவரதும் தனதும் வலியை அறிந்துகொண்டும், போருக்கேற்ற காலத்தை அறிந்து கொண்டும் செயற்படும் அரசர், அடுத்து இவ்வாறு இடத்தை அறிவது முக்கியம் ஆகையால், வலியறிதல்,காலம் அறிதல் அதிகாரங்களின் பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டுளள்து.

'இடன் அறிதல்' என்ற அதிகாரத்தில்,

(அ) பகைவரின் கோட்டையைச் சூழ்ந்திருத்தலுக்கேற்ற இடன் அறிதலும்,

- பகைவரைச் சிறியவர் என்று எண்ணாமல், அவர் கோட்டையைச் சூழ்ந்து முற்றுகையிடுவதற்கு ஏற்ற நிலமையைத் தெளிந்து கொண்டே போர்த்தொழிலைத் தொடங்குக. பகைவரை முற்றுகையிடுவதற்குத் தகுதியான இடத்தைக் காணமுன் எந்தச் செயலையும் செய்யவும் வேண்டாம். அவர் வலிமை குறைந்தவர் என்று இகழவும் வேண்டாம். அல்லது போரை ஆரம்பித்தல் ஆகாது எனும் கருத்துப்பட,

''தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க, முற்றும்
இடங்கண்ட பின் அல்லது"(1)

எனும் குறள் இவ்வதிகாரத்தின் தொடக்கத்தில் வள்ளுவரால் வைக்கப்பெற்றுள்ளது. அடுத்துக் காணப்படும்,

''முரண்சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் அரண்சேர்ந்து ஆம்
ஆக்கம் பலவும் தரும்"(2)

எனும் குறள், ''மாறுபாட்டோடு கூடிய வலிமையுடையவர்களுக்கும் இடனறிந்து அமைக்கப்பட்ட அரணைச் சேர்ந்து ஆகின்ற ஆக்கங்கள் பல" எனும் கருத்தைக் கூறுகின்றது. அதாவது, தக்க இடத்தைத் தெரிவுசெய்து அரண் அமைக்கப்பட்டால், நிலை பெற்று நின்று பகைவரைத் தொடர்ச்சியாக எதிர்க்க முடியும், பகைவர் எதிர்ப்பையும் தாங்க முடியும். போரிடுவதில் முரண்பாடு கொண்ட வலிமையோர்க்கும் தாம் பழகிய அரணைச் சேர்ந்ததனால் உண்டாகும் வசதிகள் முற்றுகையிடுவதில் வெற்றி முதலான பல நலங்களையும் தரும்.

தம்மைக் காக்கவல்ல அரணை அமைத்துப் பாதுகாப்புத் தேடிக்கொண்டு போர்செய்தால், வலிமைகுறைந்த அரசரும் வலியராய் வெல்வர். அதாவது, தக்க இடத்தைத்தெரிந்து தம்மைக் காத்துக் கொண்டு,பகைவரோடு போர்வினை செய்வராயின் வலிமையில்லாதவரும் வலிமையராகி பகைமையை வெல்வர்.என, முற்றுகையிடும் இடத்தைப் பற்றி அறிவதன் முக்கியத்துவம் அடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மேலும்,தக்க இடத்தை அறிந்து சென்ற அரசர், அரணைப் பொருந்தி நின்று போர் புரிவாராயின், அவரை வெல்லக்கருதிய அரசர் தம் எண்ணத்தை இழப்பர்.அதாவது, தாம் வினைசெய்தற்கேற்ற பாதுகாப்பான இடத்தை அறிந்து அங்கு சென்று பகைவரை நெருங்கிப் போர் செய்தால் அவரை முன்பு வெல்ல எண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தை இழந்துவிடுவர்.என்பதும் கூறப்பட்டுள்ளது. இக்கருத்துகள் முறையே,

''ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின"(3)

''எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்"(4)

எனும் குறள்களில் கூறப்பெற்றுள்ளது.
இவ்வாறு பகைவர் அரணை முற்றுகையிட்டுத்தங்கியிருந்து போர் புரிவதற்கேற்ற இடத்தை அறிவது பற்றி 'இடன்அறிதல்' அதிகாரத்தின் முதல் நான்கு குறள்களும் எடுத்துரைக்கின்றன.

(ஆ) போர் செய்தற்கேற்ற இடன் அறிதலும்,

''நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற"(5)

ஆழமான கடலில் முதலையானது பிற எல்லாவற்றையும் வெல்லும். ஆனால்,அவ்விடத்திலிருந்து நீங்கினால் பிற விலங்குகள் முதலையை வெல்லும். அதுபோல தான் வெல்லக் கூடிய இடத்தையே தெரிவு செய்து வினை நிகழத்தினாற்றான், போர் வெற்றி ஓர் அரசருக்குச் சாத்தியமாகும்.

''கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து"(6)

நிலத்திலே ஓடும் பெரிய தேரானது கடலிலே ஓட மாட்டாது. கடலிற் செல்லும் படகு முதலியன நிலத்திலே செல்லும் வன்மையற்றன. இவ்வாறே, தனக்குரித்தான இடத்தைத் தெரிவு செய்தாற்றான் ஓர் அரசர் போரிலே வெல்லலாம்.

''அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்"(7)

www.kcdu.lk

போர்த்திறங்களை எல்லாம் ஆராய்ந்து தக்க இடத்தைப் பொருந்திச்செய்வாராயின், ஓர் அரசர் வெல்வதற்குப் பிற துணை எதுவும் தேவையில்லை.

(இ) பகைவரைப் பொருதக்கூடாத இடத்தை அறிதலும் (பகைமேற்சென்று தாக்கலாகா இடங்களும் தாக்கின் நேருந்தீங்கும்)கூறப்பட்டுள்ளவாற்றை விளக்கி,

'இடன் அறிதல்' அதிகாரத்தின் நிறைவுக் குறள்கள் மூன்றும், பொருத்தமற்ற இடத்தில் பகைவருடன் போர்வினை நிகழ்த்தக்கூடாது என்பதையும், அவ்வாறு நிகழ்த்தின் இழிவு ஏற்படும் என்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றன.

''சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்"(8)

பெரும் படையையுடைய அரசர் ஒருவர், தக்க இடத்தை அறியாது, தனக்குப்பொருத்தமற்ற இடத்தில் போர் நிகழ்த்துவாராயின், சிற்றரசனிடம் தோற்றுவிடல் கூடும். அதாவது சிறு படையினை உடையவரும், தன் வலிமையைச் செலுத்தக்கூடிய இடத்தில் சேர்ந்திருந்தால், பெரும்படை உடையவரும் தன் முயற்சியில் தோல்வி காண்பர்.

''சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது"(9)

அரண் சிறப்பும் பெருமையும் இல்லாத சிற்றரசர் எனினும், அவர் உறைகின்ற இடத்திற்கே சென்று அவரை வெல்லுதல் அரிதானது. அதாவது அழித்தற்கு அரிய அரண் சிறப்பும் பெரும்படையும் பெரும் பொருளுமாகிய பிற பெருமையும் இல்லாதவராயினும் போர் வினைக்குச் சிறந்த மாந்தரை அவர் நிலையாக வதியும் இடத்திற்குச் சென்று அவரைத் தாக்குதல் அரிதாம்.

''காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகதத் களிறு"(10)

வேலாள்பவர்களைக் கொம்பில் கோத்த வலிமையுடைய யானையும், சேற்று நிலமானால் நரியிடம் தோற்றுவிடும் என்ற கருத்துத் தோன்றக் கூறப்பட்டுள்ள இக்குறளின்மூலம், பெரிய அரசரும் பொருத்தமற்ற இடத்தில் போரிட்டால் சிற்றரசரிடம் தோற்றுவிடுவர் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஈ)இவற்றைக் கூறுவதற்கு எடுத்தாண்டுள்ள அணிகள் பற்றியும் கருத்துரைக்குக.

- **பிறிது மொழிதல் அலங்காரம்**:ஆழமான நீரினுள் மற்றைய உயிர்களை முதலை வெற்றி கொள்ளும். நீரைவிட்டு வெளியே வந்தால், முதலையை மற்றைய விலங்குகள் கொன்றுவிடும். அதுபோல போருக்கச் செல்லும் அரசர் பகைவர் நிற்பதற்கு ஆற்றல் இல்லாத இடம் அறிந்து செல்வாராயின் அவர் தமக்கு எளியராவர்.ஆனால் தாம் நிற்பதற்கு ஆற்றல் இல்லாத இடம் செல்வாராயின் அவர்க்கு இவர் எளியராவர்.

  "நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
  நீங்கின் அதனைப் பிற."(495)

- **பிறிது மொழிதல்:** நிலத்திலே ஓடுவதற்குரிய வலிய சக்கரங்களைக் கொண்ட தேர்கள் கடலில் ஓடா. கடலில் ஓடும் கப்பல்களும் நிலத்தில் ஓடமாட்டா.அதுபோல பகைவரிடத்துச் சென்றவர் பகைவரிடங்களை அறிந்து அவற்றுக்குப் பொருத்தமான கருவிகளை ஆராய்ந்து போர் செய்தல் வேண்டும்.ஏனெனில் ஒவ்வொருவரும் தத்தம் நிலத்தில் வலிமையரே.

  "கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
  நாவாயும் ஓடா நிலத்து."(496)

- **பிறிது மொழிதல்**: பாகர்க்கும் யானை மறவர்க்கும் அடங்காதனவாய்ப் போர்க்களத்தில் வேல் மறவரைக் கொம்பாற் குத்திக்கோத்த மதயானைகளையும் அதன் கால் ஆழ்கின்ற சேற்று நிலத்தில், சிறு நரிகள் கொன்றுவிடும். அதுபோல ஆண்மையும் பெரும்படையும் உடைய பேரரசரும் தமக்கேற்காத இடத்துச் சென்று போரிடின், மிக எளியவராலும் வெல்லவுங் கொல்லவும் படுவர்.

  "காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா
  வேலாள் முகத்த களிறு."(500)

இங்கு, தரப்பட்டுள்ள குறள்களில் வெளிப்படையாகப் போர் தொடுக்கும் அரசர், எதிர்க்கும் அரசர் எவருமே சுட்டப்பெறவில்லை. மாறாக,

= கடலில் முதலை வெல்லும், பிற இடங்களில் அதனைப் பிற வென்று விடும்.
= கடலில் படகு ஓடும், நிலத்தில் தேர் ஓடும். கடலில் தேர் ஓடாது. நிலத்தில் படகு ஓடாது.
= வலிய யானையை சேற்று நிலத்தில் நரி வெல்லும்.

போன்ற விடயங்களே கூறப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இடன் அறிதல் அவசியமானது என்பது விளக்கப்பட்டுள்ளது. அதாவது முதலை, தேர், யானை,நரி எனப் பிற பொருட்கள் மூலமாக அரசர் இடன் அறிதல் முக்கியம் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளதால் இது 'பிறிதுமொழிதல்' அணியாகும்.

	இடனறிதல் வகைப்பாடு	**தொகை**
(அ)	பகைவரின் கோட்டையைச் சூழ்ந்திருத்தலுக்கேற்ற இடன் அறிதல்(பகைவர் அரணின் புறத்திருப்பார் இடம் அறிதல்)	1,2,3,4
(ஆ)	போர் செய்தற்கேற்ற இடன் அறிதல் (வினை செய்வதற்கான இடத்தை அறிதல்)	5,6,7
(இ)	பகைவரைப் பொருதக்கூடாத இடத்தை அறிதல்(பகைமேற்சென்று தாக்கலாகா இடங்களும் தாக்கின் நேருந்தீங்கும்)	8,9,10
(ஈ)	அணி: பிறிது மொழிதல்	5,6,10

www.kedu.lk

கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை - 09
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்: தெரிந்துதெளிதல்
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயராஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03. மாதிரி வினாத் தொகுதி (i)
தெரிந்து தெளிதல் என்ற அதிகாரத்தில் திரவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) தக்கவர்களைத் தெரிந்து தெளிதல்

- அறம், பொருள் ஆசை, காம இச்சை, தன் உயிருக்காக அஞ்சும் அச்சம் என்னும் நான்கினாலும் ஒருவரது மனநிலையை நன்கு சோதித்து, அவரிடத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.(1)
- நல்லகுடியில் பிறந்து, குற்றங்களிலிருந்து நீங்கித் தனக்குப் பழி என்று அஞ்சி நிற்கும் நாணமுடையவரிடத்திலேயே நம்பிக்கை வைக்க வேண்டும்.(2)
- அரிய நூல்களைக் கற்றுக் குற்றமற்று விளங்குபவரிடத்தும், நுணுகி ஆராயுமிடத்து அவரிடமும் அறியாமை காணப்படுவதை கவனத்தில் கொள்தல் வேண்டும்.(3)

(ஆ) குணம்மிக்க யாவரையும் தெளிதலும் குணங்குற்றங்களை அறிவதற்குரிய வழியும்

- **குணங்குற்ற மிகுதியை அறிதல்**:ஒருவரின் குணங்களையும் பின்பு குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றில் மிகுதியானவை எவையென ஆராய்ந்து, அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.(4)
- **செயல் கொண்டு அறிதல்**:உயர்ந்த நல்ல குணத்தையும் தாழ்ந்த சிறுமைக் குணத்தையும் உரசிக்கண்டு அறிவதற்கு ஏற்றக் கட்டளைக்கல் அவரவர் செய்யும் செயல்களே.(5)

(இ) தெளியப்படாதவர்களை தெளிவதால் ஏற்படக்கூடிய தீங்கும் தெளிவதற்கான எல்லையும்
தெளியப்படாதவர்களை தெளிவதால் ஏற்படக்கூடிய தீங்குகள்:

- தமக்கென உறவுத்தெடர்புகள் இல்லாதார் உலகத்தில் பற்று இல்லாதவராகையால் **பழிக்கு நாணாதாரை தெரிந்து தெளிவடைதலைத் தவிர்தல் குற்றமாகும்** (6)
- அறிய வேண்டியவைகளை அறியாத ஒருவரை **அன்புடைமை காரணமாகத் தேர்ந்து கொண்டால் எல்லாவகையான அறியாமையையும் தரும்**(7)
- தெளிவாக ஆராயாமல் ஒருவரைத் துணையாக நம்பித்தெரிந்தால் அத்தெரிவு **தெரிந்தவருக்கு மட்டுமின்றி அவர் வழிமுறையில் வருபவர்களுக்கும், தீராத துன்பத்தை உண்டாகும்**(8)
- ஒருவரைப் பற்றி ஆராயாமல் நம்புவதும், அப்படி **ஆராய்ந்து நம்பியவரிடத்திலே சந்தேகம் கொள்ளுவதும் தீராத துன்பத்தையே தரும்**(10)

தெளிவதற்கான எல்லை:குணங்களை நன்கு ஆராய்தல்,சந்தேகமின்றி நம்புதல்

- யாரையுமே ஆராயாமல் நம்புதல் வேண்டாம். நன்கு ஆராய்ந்த பின்பே நம்புதல் வேண்டும்.
- ஒருவரை ஆராய்ந்து நம்பியபின் அவர் சொல்லும் பொருள்களை நல்லவையாகவே சந்தேகமின்றி நம்புதல் வேண்டும். பின்பு அவரிடத்தில் சந்தேகம் கொள்ளக் கூடாது.(9)

03. மாதிரி வினாத் தொகுதி (ii)
தெரிந்து தெளிதல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) தக்கவர்களைத் எவ்வெவ்வாறு தெரிந்து தெளிதல் வேண்டும்?

- அறம், பொருள் ஆசை, காம இச்சை, தன் உயிருக்காக அஞ்சும் அச்சம் என்னும் நான்கினாலும் ஒருவரது மனநிலையை நன்கு சோதித்து, அவரிடத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

  அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
  திறந்தெரிந்து தேறப் படும். (501)

- நல்லகுடியில் பிறந்து, குற்றங்களிலிருந்து நீங்கித் தனக்குப் பழி என்று அஞ்சி நிற்கும் நாணமுடையவரிடத்திலேயே நம்பிக்கை வைக்க வேண்டும்.

  குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
  நாணுடையான் கட்டே தெளிவு. (502)

- அரிய நூல்களைக் கற்றுக் குற்றமற்று விளங்குபவரிடத்தும், நுணுகி ஆராயுமிடத்து அவரிடமும் அறியாமை காணப்படுவதை கவனத்தில் கொள்தல் வேண்டும்.
  அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
  இன்மை அரிதே வெளிறு. (503)

(06 புள்ளிகள்)

www.kedu.lk

(ஆ) குணங்குற்றங்களை அறியும் கருவிகள் யாவை?

- **குணங்குற்றங்களில் மிகுதியானவை**:ஒருவரின் குணங்களையும் பின்பு குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றில் மிகுதியானவை எவையென ஆராய்ந்து, அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

  குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
  மிகைநாடி மிக்க கொளல். (504)

- **அவரவர் செய்யும் உயர்ந்த தாழ்ந்த செயல்கள்**:உயர்ந்த நல்ல குணத்தையும் தாழ்ந்த சிறுமைக் குணத்தையும் உரசிக்கண்டு அறிவதற்கு ஏற்றக் கட்டளைக்கல் அவரவர் செய்யும் செயல்களே.

  பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
  கருமமே கட்டளைக் கல். (505)

(04 புள்ளிகள்)

(இ) தெளியப்படாதவர்களை தெளிவதால் ஏற்படக்கூடிய குற்றங்கள் யாவை?

- தமக்கென உறவுத்தெடர்புகள் இல்லாதார் உலகத்தில் பற்று இல்லாதவராகையால் **பழிக்கு நாணாதாரை தெரிந்து தெளிவடைதலைத் தவிர்தல் குற்றமாகும்**

  அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
  பற்றிலர் நாணார் பழி. (506)

- அறிய வேண்டியவைகளை அறியாத ஒருவரை **அன்புடைமை காரணமாகத் தேர்ந்து கொண்டால் எல்லாவகையான அறியாமையையும் தரும்.**

  காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
  பேதைமை எல்லாந் தரும். (507)

- தெளிவாக ஆராயாமல் ஒருவரைத் துணையாக நம்பித்தெரிந்தால் அத்தெரிவு **தெரிந்தவருக்கு மட்டுமின்றி அவர் வழிமுறையில் வருபவர்களுக்கும், தீராத துன்பத்தை உண்டாகும்**(8)

  தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
  தீரா இடும்பை தரும். (508)

- ஒருவரைப் பற்றி ஆராயாமல் நம்புவதும், அப்படி **ஆராய்ந்து நம்பியவரிடத்திலே சந்தேகம் கொள்ளுவதும் தீராத துன்பத்தையே தரும்**.

  தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
  தீரா இடும்பை தரும். (510)

(08 புள்ளிகள்)

(ஈ)ஒருவரைத் தெளிவதற்கான எல்லைகள் யாவை?

- குணங்களை நன்கு ஆராய்தல்,சந்தேகமின்றி நம்புதல்
- யாரையுமே ஆராயாமல் நம்புதல் வேண்டாம். நன்கு ஆராய்ந்த பின்பே நம்புதல் வேண்டும்.
- ஒருவரை ஆராய்ந்து நம்பியபின் அவர் சொல்லும் பொருள்களை நல்லவையாகவே சந்தேகமின்றி நம்புதல் வேண்டும். பின்பு அவரிடத்தில் சந்தேகம் கொள்ளக் கூடாது.

  தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
  தேறுக தேறும் பொருள்.(509)

(02 புள்ளிகள்)

03. மாதிரி வினாத் தொகுதி (iii)

தெரிந்து தெளிதல் என்ற அதிகாரத்தில் திரவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ)குற்றத்தைத் தெளிந்து குணமுடையாரைத் தெளிதல்
(ஆ)குணங்குற்றங்களை அறியும் கருவிகள்
(இ)தெளியப்படாதார்,அவரைத் தெளிவதால் ஏற்படும் இழுக்கும் தெளிவிற்கான எல்லையும்.

	தெரிந்து தெளிதல் வகைப்பாடு	**தொகை**
(அ)	தக்கவர்களைத் தெரிந்து தெளிதல் தக்கவர்களைத் எவ்வெவ்வாறு தெரிந்து தெளிதல் வேண்டும்	1,2,3
(ஆ)	குணம்மிக்க யாவரையும் தெளிதலும் குணங்குற்றங்களை அறிவதற்குரியவழியும்குணங்குற்றங்களை அறியும் கருவிகள்	4,5
(இ)	தெளியப்படாதவர்களை தெளிவதால் ஏற்படக்கூடிய தீங்கும்	6,7,8,10
(ஈ)	தெளியப்படாதவர்களை தெளிவதற்கான எல்லை	9
(உ)	அணி: உருவகம்	5

www.lkedu.lk

கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை - 10
க.பொ.உயர்தரம் - தமிழ் - திருக்குறள்: தெரிந்து வினையாடல்
வினா விடைப்பத்திரம் : நேரம்:35 நிமிடம்

தயாரிப்பு : திரு.எ.த.ஜெயராஞ்சித் (மட்டக்களப்பு - வாழைச்சேனை : 0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

03. திருக்குறள் 'தெரிந்து வினையாடல்' எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) தெரிந்து வினையாடலின் இலக்கணம்
தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட செயலால் வருகின்ற நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து, அதில் நன்மையையே விரும்பிச் செய்யும் தன்மையுடையவரையே அந்தச் செயலுக்குப் பயன்படுத்துவது தெரிந்து வினையாடலின் முதல் இலக்கணமாகும்.

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். (511)

வருமானம் வரக்கூடிய வழிகளை அதிகப்படுத்தி, நாட்டின் வளங்களையும் பெருக்கி, சுற்றத்தார்,பகைவர்,கள்வர் போன்றோரால் வரும் இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவராக இருத்தல் வேண்டும்.

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை. (512)

அரசனிடத்து அன்பும், அரசனது கருத்தை அறியும் அறிவும், செயல் செய்யும்போது ஐயமில்லாமல் தெளியும் ஆற்றலும், பிறர் பொருள்மீது பேராசை இன்மை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாகப் பெற்றிருப்பவரையே தேரிவு செய்வதுமே **தெரிந்து வினையாடலின்** நல்லிலக்கணமாகும்.

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. (513)

(06 புள்ளிகள்)

(ஆ) வினையிலிருந்து தவிர்க்கப்படவேண்டியவர்:
எவ்வளவுதான் பல வழிமுறைகளை ஆராய்ந்து தெளிந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்து(செயலை மேற்கொண்டு செய்யும் போதும்) அச்செயலின் வகையால் அவரது மனம் மாறுபடும் மக்கள் உலகத்தில் பலர் உண்டு. எனவே ஒருவரைத் தெளிந்த பின்பும் அத்தகையோரிடத்தில் விளிப்பாயிருபதுடன் அவர்களைக்கொண்டு வினை செய்வதிலிருந்தும் தவிர்த்தலும் வேண்டும்.

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். (514)

செய்யும் செயலைப் பற்றியும் அதனைச் செய்யும் வழிகளைப்பற்றியும் நன்றாக அறிந்து, இடையில் வரும் துன்பங்களைத் தாங்கியும் திறமையோடு செயல் செய்ய வல்லவரை அல்லாமல், 'இவர் சிறந்தவர்' 'நம்மிடம் அன்புமிக்கவர்' , 'இவர் நமக்கு வேண்டியவர்','நமக்குப்பழக்கமானவர்' என்றும் ஒருவரை செயல் செய்ய அமர்த்தக்கூடாது. அப்படிப்பட்டவர்களை அரசியல் செயற்பாட்டிலிருந்தும் விலக்குதல் வேண்டும்.

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று. (515)

(04 புள்ளிகள்)

(இ) ஆளுதற்குரியாரை ஆளும் திறன்களும் ஆளும் வழிவகையும்
ஒரு செயலைச் செய்பவரது இயல்பை பற்றி நன்கு ஆராய்ந்தும், செய்யும் செயலினியல்பும் ஆராய்ந்தும், அதனைச் செய்ய தகுந்த காலத்தோடும் பொருந்துகிறதா என்பதையும் ஆராய்ந்த பின்பே ஒரு செயலைச் செய்வதற்கு ஒருவரை நியமிப்பது ஆழுகையாளரின் திறனாகும்.

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல். (516)

www.ikeduLK

இச்செயலை துணையும் பொருளும் எனும் இக்கருவிகளாலும் இன்ன காரணத்தாலும் இவர் முடிக்க வல்லவர் என்று ஆராய்ந்து,தெளிந்த பிறகே அச்செயலை அவரிடத்திலே ஒப்படைத்தல் ஆழுகையாளரின் சிறப்புத்திறனாகும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். (517)

இந்த வேலைக்குத் தகுந்தவர் இவரே என்று ஆராய்ந்து தெளிவுகண்ட பின்னால், அவரையே அச்செயலைச் செய்தற்கு உரியவராகக் கருதி அதனால் அச்செயல் உயர்வு பெறுமாறு செய்தல் வேண்டும். அப்போதுதான் அச்செயலை தானே செய்து முடிக்கும் விருப்பமும் கொள்வதால் அச்செயல் ஆர்வத்தோடும் செய்யப்படும். இல்லாவிடில் அச்செயல் முடிக்கப்படாமல் போய்விடும் என ஆராந்து செயற்படுவதும் ஆழுகையாளரின் திறனாகும்.

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல். (518)

எப்பொழுதும் தான்மேற்க்கொண்ட செயலில் கண்ணும் கருத்துமாக இடைவிடாத முயற்சியுடையவரது நட்பை, அரசர் பிறர் சொல்வதைக்கேட்டு தவறாக நினைத்து அவருடைய உரிமையான உறவை மாறுபட தவறாகக்கருதிக்கொண்டால், அவரது செல்வம் அவரைவிட்டு நீங்கிவிடும். எனவே செயலில் இடைவிடாத முயற்சியுடையவரது நட்பைத், தவறாக நினைக்காமல் செயற்படுவதும் ஆழுகையாளரின் திறனாகும்.

வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு. (519)

ஆளும் வழி செய்வது:அரசர், பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டேன் எனக்கவலை கொள்ளாமல் இருக்கவும் கூடாது. எண்ணம்,சொல்,செயல்களில் செயல் செய்கின்றவர்கள் தவறிழைக்காமலிருக்கும்வரையில் உலகமும் கெடாது, ஆகையால் மன்னர் நாள்தோறும் அவருடைய நிலைமையை ஆராய்ந்து கண்காணித்து அவர் கெடாமல் இருக்க வழிசெய்தால் உலகமும் கெடாது. எனவே ஆளுவதற்கு சிறந்த வழி இதுவே.

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. (520)

(10 புள்ளிகள்)

	தெரிந்து வினையாடல் வகைப்பாடு	**தொகை**
(அ)	தெரிந்து வினையாடலின் இலக்கணம்	1,2,3
(ஆ)	வினையிலிருந்து தவிர்க்கப்படவேண்டியவர்	4,5
(இ)	ஆளுதற்குரியாரை ஆளும் திறன்களும் ஆளும் வழிவகையும்	6,7,8,9,10

திருக்குறள் அரசியலில் காணப்படும் அற இலக்கியப் பண்புகள்.

- அறத்தைப் பிரதான பாடுபொருளாகக் கொள்ளல்.அறநிலைப்பட்ட அரசியலை வகுத்துக்கூறல்.
- பொருட்பாலில் சமுதாய வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும் போது முடியரசு, குடியரசு எனும் இருவகையில் அரசியலில் முடியரசுக்கான அறச் செய்திகளைக் கூறல்.
- அரசியல்ப் பொருளைச் சமுதாய ஒழுக்கவியலாகக் கூறல்.
- அர்த்தசாஸ்திரம், இராஜநீதி சாஸ்திரம்,மனுஸ்மிருதி,காமசூத்திரம் முதலிய நீதிநூல்களின் தன்மைகளைப் பெற்றிருத்தல்.
- அரசியல் நடாத்துவதற்கு ஒன்றுக்கொன்று துணையான அங்கங்களது இயல்பினை அற ஒழுக்கமாகக் கூறுதல்.
- அரசியலில் உள்ளோர்க்குக் (அரசர்,அமைச்சர்) கூறினாலும் எல்லோருக்கும் பொதுவாக அறநிலைகள் அமையுமாறு கூறல்.
  - = உடம்பாட்டு முகத்தாலும் எதிர்மறை முகத்தாலும் கூறல்:
  - = குணங்களை விதித்தும் குற்றங்களை விலக்கியும் கூறல்:
  - = அணிகளைக் கையாள்வதன் மூலம் கருத்தை விளக்க வைத்தல் : உவமை, உருவகம்.ஒட்டணி,பிறிது மொழிதல்,சொற்பொருள் பின்வருநிலை
  - = செப்பல் ஓசையுடைய வெண்பா யாப்புப் பயன்படுத்தப்பட்டமை : குறள் வெண்பா.
  - = உளநூற் பண்பைப் பெற்றிருத்தல்.
  - = சொல்லாட்சிச் சிறப்பு : சிறந்த சொல், சொற்றொடர்களைக் கையாண்டிருப்பது.

www.ikeu.lk